**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 12/2019**

பெயர் : பாண்டியம்மாள் (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

நாள் : 28.01.2025.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் வேலூரில் கடந்த 25 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது ஆதார் அடையாள அட்டை மற்றும் ரேசன் கார்டு ஆகியவை வேலூர் முகவரியில்தான் இருந்து வருகிறது.

2. வழக்கு சொத்து அவதாண்டை கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால் ஆகியவை எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் மேற்படி விபரங்கள் தெரியாது.

3. நான் தாக்கல் செய்த நிரூபண பிரமான வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை வழக்கறிஞர் படித்துக் காண்பித்தார். தற்போது மறந்து விட்டேன்.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் தெரிவித்தேன். வழக்கு சொத்து சம்மந்தமாக எனது தனிப்பட்ட பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. நான் தாவா வழக்கை எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு வேண்டும். அதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு பிரதிவாதிகள் என்ன பதில்

தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

7. எனக்கு தாவா சொத்து எங்குள்ளது என்று தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)